## பெப்ரவரி – 13 – புதன்

### புனித ரிக்ஸி கத்தரின்

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்துணை மேன்மைமிக்கவர்! திபா. 104:1**

**முதல் வாசகம்: தொடக்க நூல் 2 : 4 – 9, 15 – 17**

ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும், விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது, மண்ணுலகில் நிலவெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை ஏனெனில் ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை. ஆனால் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தது. அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான். ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களையும், தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார். ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார். ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், "தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டுச் சொன்னார்.

**பதில்பாடல் :** என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு.

**நற்செய்தி : மாற்கு 7 : 14 - 33**

அக்காலத்தில், இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, "நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும். (கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்") என்று கூறினார். அவர் மக்கள் கூட்டத்தைவிட்டு வீட்டிற்குள் வந்தபோது அவருடைய சீடர் அவரிடம் இந்த உவமையைப்பற்றிக் கேட்க, அவர் அவர்களிடம், "நீங்களுமா இந்த அளவுக்குப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்? வெளியேயிருந்து மனிதருக்குள்ளே செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப் படுத்த முடியாது என உங்களுக்குத் தெரியாதா? ஏனென்றால், அது அவர்களுடைய உள்ளத்தில் நுழையாமல் வயிற்றுக்குச் சென்று கழிப்பிடத்திற்குப் போய் விடுகிறது" என்றார். இவ்வாறு அவர் எல்லா உணவுப் பொருள்களும் தூயனவென்று குறிப்பிட்டார். மேலும் "மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத்தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன" என்றார். இயேசு எழுந்து அங்கிருந்து புறப்பட்டுத் தீர் பகுதிக்குள் சென்றார். அங்கே அவர் ஒரு வீட்டிற்குள் போனார் தாம் அங்கிருப்பது எவருக்கும் தெரியாதிருக்க வேண்டுமென்று விரும்பியும் அதை மறைக்க இயலவில்லை. உடனே பெண் ஒருவர் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு உள்ளே வந்து, அவர் காலில் விழுந்தார். அவருடைய மகளைத் தீய ஆவி பிடித்திருந்தது. அவர் ஒரு கிரேக்கப்பெண் சிரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்தவர். அவர் தம் மகளிடமிருந்து பேயை ஓட்டிவிடுமாறு அவரை வேண்டினார். இயேசு அவரைப் பார்த்து, "முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல" என்றார். அதற்கு அப்பெண், "ஆம் ஐயா, ஆனாலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறு பிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்னுமே" என்று பதிலளித்தார். அப்பொழுது இயேசு அவரிடம், "நீர் இப்படிச் சொன்னதால் போகலாம் பேய் உம்மகளை விட்டு நீங்கிற்று" என்றார். அப்பெண் தம் வீடு திரும்பியதும் தம் பிள்ளை கட்டிலில் படுத்திருக்கிறதையும் பேய் ஓடிவிட்டதையும் கண்டார். மீண்டும் இயேசு தீர் பகுதியை விட்டு, சீதோன் வழியாகச் சென்று தெக்கப்பொலி பகுதி நடுவே வந்து, கலிலேயக் கடலை அடைந்தார். காது கேளாதவரும் திக்கிப்பேசுபவருமான ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்து, அவர்மீது கைவைத்துக் குணமாக்குமாறு அவரை வேண்டிக் கொண்டனர். யேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியை உற்றுநோக்கும்போது “இரு பக்கமும் கூரான இறைவார்த்தை” எமக்கு எச்சரிக்கை விடுப்பதோடு “பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட பேறுபெற்ற” அன்னை மரியா இறை வார்த்தையை தனது உள்ளத்தில் இருத்தி அதனை சிந்தித்து தியானிப்பது பொருத்தமானதே என்ற உண்மையையும் உணர்த்துகின்றது. இன்றைய நற்செய்தியில் பரிசேயருக்கு இறைமகன் இயேசு பதில் கூறுகின்றார் என்பதனைவிட அவர் எம் ஒவ்வொருவருக்கும் மாபெரும் எச்சரிக்கை விடுக்கின்றார் என்றே கருதவேண்டும். ஏனெனில் உடலுக்குள்ளே அசுத்தமடைந்த உணவு சென்றடைந்தாலும் ஏதோவகையில் கழிவுப் பொருளாக வெளியேறிவிடும். எனினும் எமது உள்ளத்திலிருந்து எழும் விபரீத உணர்வுகள், எம்மை நித்தியத்திற்கும் பேராபத்தில் (நரகத்தில்) கொண்டு போய்ச்சேர்க்கும். எனவே, எமக்கு உடல் ரீதியான தூய்மை எவ்வாறு அவசியமோ அதிலும் மேலாக, ஆன்ம ரீதியான தூய்மை மிக அவசியம் என்ற உண்மையை இறைமகன் இயேசு இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். ஏதேன் தோட்ட ஏவாளின் உள்ளத்து மாயை மனுக்குலத்தை பாவத்தில் விழுத்த, நாசரேத்தூரில் புதிய ஏவாள் “உமது அடிமை” என இறைவார்த்தை உதரத்தில் மனுவுருவாக இடமளித்து தூய அன்னை மரியா தனது உள்ளத்துத் தாழ்மையால் இவ்வுலகை மீட்டெடுத்தாள். எனவே, நாமனைவரும் பலவீனர்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு “நானே மாசில்லா உற்பவம்” என்று திருவாய்மலர்ந்த அன்னையின் பாதத்தில் எம்மை ஒப்படைப்போம். எமக்காக, எமது நாட்டுமக்களுக்காக, நாம் செபிக்கக் கடமைப் பட்டவர்களுக்காக, தகுதியான தூய உள்ளத்து உணர்வோடு அன்னையின் ஆயுதமான செபமாலையைத் தினமும் கரத்தில் ஏந்தி தொடர்ந்து செபிப்போம்.